செய்தி வெளியீடு எண்:1026 நாள்:02.11.2021

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான திரு. வே. துரைமாணிக்கம் மறைவு - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான வே.துரைமாணிக்கம் அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவுற்றார் என்ற துயரமிகு செய்தியறிந்து மிகுந்த வேதனையடைந்தேன். அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தின் ஆம்பலாம்பட்டு தெற்கு கிராமத்தில் பிறந்த அவர், பொதுவுடைமைச் சிந்தனையோடு உழவர்களுக்கான உரிமைக்குரலை எழுப்பியவர். காவிரி உரிமைப் போராட்டத்திலும் பெரும்பங்காற்றியவர்.

உழவர் பெருங்குடியினரின் உற்ற தோழராக விளங்கிய வே.துரைமாணிக்கம் அவர்களது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர், பொதுவுடைமை இயக்கத் தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9